மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைப் போலீசார் கண்காணித்து வருவார்கள்.

* 2 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 23—5—1968 அன்று மதுரை நகரில் நடைபெற்ற தமிழர் படை ஊர்வலத்தை மதுரை மாவட்ட கலெக்டர் பார்வையிட்டாரா?

(இ) ஊர்வலத்தில் சென்ற தமிழர் படையினர் கையில் என்ன எடுத்துச் சென்றனர்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) ரயில் நிலையத்தில் முதலமைச்சரை வரவேற்க வந்தவர்களில், தமிழ்ப்படைச் சின்னம் பொறிக்கப்பட்ட பட்டைகள் அணிந்த சிலரும் இருந்தனர். திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகள் ஏராளமாகக் காணப்பட்டன.

திரு. என். எஸ். வி. சித்தன்: 23—5—1968 அன்று, மதுரை நகருக்கு வருகை புரிந்த தமிழக அரசின் அமைச்சர்கள் அத்தனை பேருக்கும் கறுப்புக் கொடி காட்டப்போவதாக இளைஞர் காங்கிரஸ், ஜனநாயக முறையில் முன்னே அறிவித்திருந்தும்கூட, அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. அதே நேரத்தில், தமிழர் படையினர் பயங்கரமான ஆயுதங்களோடு ஊர்வலம் வர அனுமதிக்கப்பட்டது நியாயமாகுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அமைச்சர்கள் அன்றைய தினம் மதுரைக்கு வந்தது--பாவம்!--ஒரு கலியாணத்திற்காக—கலியாணத்துக்கு வந்தவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுவதாக அங்கேயிருந்த இளைஞர் காங்கிரஸ்காரர்கள் முடிவு செய்து, அதற்கான அணியினைத் திரட்டினார்கள். திரட்டிய நேரத்தில், கலியாணத்திற்கு வந்தவர்களுக்கு மதுரையில் அப்படிக் கறுப்புக் கொடி காட்டுவதென்பது மொத்தமாக எல்லா அரசியல் கட்சிகளின் பண்பாட்டையும் குறைத்துவிடும் என்ற காரணத்தாலும், அந்தக் கறுப்புக்கொடி நிகழ்ச்சி அப்பொழுது தடுக்கப்பட்டதே தவிர, வேறு பல இடங்களில் அரசியல் நிகழ்ச்சிகளுக்காகச் செல்லும் சமயத்தில் அமைச்சர்களுக்குக் காட்டப்பட்ட கறுப்புக் கொடி நிகழ்ச்சிகளெல்லாம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அது மாத்திரம் அல்ல. இளைஞர் காங்கிரஸ்காரர்களை மட்டும் தடுத்துவிட்டு, தமிழர் படை ஊர்வலம் அனுமதிக்கப்படலாமா என்று கேட்டார்கள். இரயில் நிலையத்தில் அமைச்சர்கள் வந்தபோது, அவர்களை வரவேற்பதற்காக வரும் கூட்டத்தை ஒழுங்குபடுத்த மாத்திரம்தான் தமிழர் படைத் தொண்டர்கள் பணியாற்றினார்களே தவிர, ஊர்வலம் எதுவும் நடைபெறவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, இந்தத் தமிழர் படைக்கு எதிர்ப்பாக இளைஞர் காங்கிரஸ்காரர்கள் அந்தப்

1969 பிப்ரவரி 25]

படையில் உள்ளவர்களைத் தாக்குவதற்கு ஏதுவாக அரிவாள்கள், கம்புகள் வைத்திருந்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அது சம்பந்தமாக யாராவது கைது செய்யப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அது சம்பந்தமாக எந்தத் தகவலும், விவரமும் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மறைந்த முதல்வர் அவர்கள் காலத்திலேதான் தமிழர் படை ஆரம்பிக்கப் பட்டது. இப்பொழுது கூட்டணியில் இருக்கும் அத்தனை அங்கத்தினர்களும், தமிழர் படை தேவை இல்லை என்று சொல்லு கிறார்கள். அதையொட்டியாவது, புதிதாக இருக்கும் முதல்வர் அவர்கள் காலத்திலே இந்தத் தமிழர் படையை ஒழித்துக் கட்டுவ தற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். தமிழர் படை, மதுரை நகரத்தைப் பொறுத்த வரையில் தொண்டர் முகாமாக இருந்து, அரசியல் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. வேறு நகரங்கள் எதிலும் பரவவில்லை.

திரு. கே. விநயகம்: சார், தமிழர் படையின் நோக்கம் ஒரு வேளை கூட்டங்களைச் சரிவர நடத்துவதற்காகவும், அங்கு சச்சரவு கள் வராமல் பார்த்துக் கொள்ளுவதற்காகவும் என்று இருந்தால், நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே வைத்திருக்கும் போலீஸ் காரர்களுக்கு வேலை இல்லையே, அவர்கள் ஏன் இருக்க வேண்டும்? அவர்களையெல்லாம் ரத்து செய்துவிட்டு, தமிழர் படையினரையே அந்தப் பணிக்கு வைத்துக்கொள்ளலாமா என்கிற யோசனை நல்லதா என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த யோசனை, சுதந்திரம் காக்கும் படையினர் உதயமானபோது திரு. விநயகம் அவர் களால் சொல்லப்பட்டிருக்கவேண்டும். வெள்ளைப் புறாச் சேனை துவக்கப்பட்ட நேரத்தில் இந்த விசித்திரமான யோசனையை திரு. விநயகம் அவர்கள் அங்கே கூறியிருக்கவேண்டும். அப் பொழுது சொல்லத் தவறிவிட்டார்கள். போனால் போகிறது. அவர்களுக்குச் சொல்ல விரும்பாத யோசனையை எங்களுக்குச் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இப்பொழுதும், காங்கிரஸ் கட்சியின் கூட்டங்களிலேகூட, தலைவர் காமராஜ் அவர்களுடைய பதக்கத்தை அணிந்து இளைஞர் காங்கிரஸ்காரர்கள் நின்று தொண்டர்களாகப் பணி புரிந்து வருகிறார்களே, அதைப்போலத்தான் தமிழர் படையினரும் பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஊராட்சிகள்

*29 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்? வருவாய் எவ்வளவு இருக்க வேண்டும்?

(இ) மைனர் பஞ்சாயத்துக்களுக்கு குறை அளவு, அதிக அளவு மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) மக்கட் தொகை ஐயாயிரத்துக்குக் குறையாமலும் ஆண்டு வருமானம் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாமலும் இருக்குமிடங்களில் பேரூராட்சிகள் நிறுவப்படும். ஏனைய இடங்களில் மக்கட்தொகை ஐந்நூறுக்குக் குறையாமல் இருந்தால் ஊராட்சிகள் ஏற்படுத்தப் படும். ஊராட்சிகளில் அதிக அளவு மக்கட் தொகை எவ்வளவு இருக்க வேண்டும் என்று 1958 தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் வறையறுக்கப்படவில்லை.

*30 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967–ம் ஆண்டில் தமிழ் நாட்டில் எத்தனை கிராமப் பஞ்சாயத்துக்கள் மேஜர் பஞ்சாயத்துக்களாக மாற்றப் பட்டுள்ளன?

(இ) எத்தனை நகரப் பஞ்சாயத்துக்கள் முனிசிபாலிடிகளாக மாற்றப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) 48 பேரூராட்சிகள்.

(இ) ஒன்றும் இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, குறிப் பிட்ட மக்கள் தொகைக்கு மேலாக இருக்கும் மைனர் ஊராட்சி மன்றங்கள் பிரிந்து செல்லவேண்டும் என்ற கோரிக்கைகள் விடப் பட்டும், இன்னும் பல பிரித்துத் தரப்படவில்லை. அதன்பேரில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் திருத்தி, விரிவான மசோதா கொண்டுவரும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பஞ்சாயத்து சட்டங்களைத் திருத்தவேண்டும் என்ற ஒரு எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

திரு. இரா. மாணிக்கவாசகம் : போதைத் தலைவர் அவர்களே, மேஜர் பஞ்சாயத்தினுடைய வருமானம் பத்தாயிரம் ரூபாய் என்று வரையறை குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றுள்ள நிலைக்கு ஏற்றாற்போல், இருபதாயிரம் ரூபாய் என்று உயர்த்தி நிர்ணயிக்க அரசு முன்வருமா?